இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன.அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார். அப்போது, அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்று பேசிக் கொண்டார்கள். (லூக்கா 24:30-32)

# இக்காலத்தின் அமைதிச் சூழலில், செவிமடுக்கும் திறனை வளர்ப்போம்

## திருத்தந்தை வேண்டுகோள்

**வத்திக்கான்**: தூய ஆவியார் நம்மில் செயல்பட அனுமதித்தால், அவருக்குப் பணிந்து நடந்தால், பணம், வீண்பெருமை, புறங்கூறுதல் ஆகிய மூன்று சோதனைகளை முறியடிக்கலாம்



சாந்தா மார்த்தா சிற்றாலய திருப்பலி - 21-04-20

இந்த கொள்ளை நோய் காலத்தில் நிலவும் மிகுந்த அமைதிச் சூழல், நமக்குச் சற்று புதியதாக இருந்தாலும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நாம் செவிசாய்ப்பதில் வளரும் திறனுக்காக ஆண்டவரை மன்றாடுவோம் என்று, கடந்தச் செவ்வாய் காலை திருப்பலியைத் துவக்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்த, முதல் கிறிஸ்தவ குழுமமாகிய, ஆண்டவரில் நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும், தங்கள் உடைமைகள் அனைத்தையும் பொதுவானதாகக் கருதியது பற்றிக் கூறும் இத்திருப்பலியின் முதல் வாசகம் (தி.ப.4:32-37) பற்றிய சிந்தனைகளை மறையுரையில் வழங்கிய திருத்தந்தை, முதல் கிறிஸ்தவர்கள் மத்தியில் நிலவிய நல்லிணக்கம், இன்றையத் திருஅவைக்கு ஓர் எடுத்துக்காட்டு என்று கூறினார். இக்கிறிஸ்தவர்கள் இவ்வாறு வாழ்வதற்கு அவர்களுக்குச் சக்தியைக் கொடுத்தவர், தூய ஆவியாரே என்றும், நாமும், நம் குழுமங்களைப் பிரிக்கின்ற, பணம், வீண்பெருமை, புறங்கூறுதல் ஆகிய மூன்று சோதனைகளை வெல்வதற்கு, தூய ஆவியார் நம்மில் செயல்பட அனுமதித்தால், நம்மிலும் அவர் வியத்தகு செயல்களை ஆற்றுவார் என்றும், திருத்தந்தை கூறினார்.

### தூய ஆவியாருக்குப் பணிவு

நம் பணிவு, தூய ஆவியாருக்குத் கதவைத் திறந்து வைக்கின்றது, அவரே, மாற்றத்தை, தோற்ற மாற்றத்தை, மறுபடியும் பிறப்பதை ஆக்குபவர். தூய ஆவியாரை அனுப்புவது இயேசுவின் வாக்குறுதியாகும், அவர், நம்மால் நினைத்துப் பார்க்க முடியாத காரியங்களில்கூட, வியப்புக்களை ஆற்றும் சக்தி படைத்தவர் என்று திருத்தந்தை கூறினார்

தூய ஆவியார் ஆற்றும் செயலுக்கு நாம் பணிந்து இருந்தால், முதல் கிறிஸ்தவ சமுதாயம், ஒரு சிறந்த எடுத்துக்காட்டான அடையாளமாக உள்ளது போன்று, நாமும் விளங்கலாம் என்றும், தூய ஆவியார் நல்லிணக்கத்தை உருவாக்குவார் என்றும் திருத்தந்தை கூறினார்.

### பிரிவினைக்குக் காரணங்கள்

பங்குத்தளங்கள், மறைமாவட்டங்கள், அருள்பணியாளர் குழுமங்கள், துறவு சபைகள் ஆகியவை மத்தியில் பல காரியங்கள் பிரிவினையை ஏற்படுத்து கின்றன, அவற்றில் பணம், வீண்பெருமை, பயனற்ற பேச்சுகள் ஆகிய மூன்றும் முக்கியமானவை என்று கூறிய திருத் தந்தை, பணம், குழுமத்தைப் பிரிக்கின்றது, இதனாலேயே ஏழ்மை, குழுமத்தின் அன்னையாக நோக்கப்படுகிறது என்றும் கூறினார்.

குழுமத்தைக் காவல்காக்கும் சுவர் ஏழ்மையாகும் என்றும், குடும்பங்களையும் பணம் பிரிக்கின்றது, சொத்துப் பிரச்சனையால் எத்தனை குடும்பங்கள் பிரிகின்றன என்று எடுத்துரைத்த திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு குழுமத்தைப் பிரிக்கும் மற்றொரு காரியம் வீண்பெருமை, இது, மற்றவரைவிட உயர்ந்தவராக நோக்கப்பட வேண்டும் என்பதிலிருந்து எழுகின்ற ஆசையாகும் என்று கூறினார்.

ஆண்டவரே நான் மற்றவர்போல் இல்லாமல் இருப்பதற்கு நன்றி என்ற பரிசேயரின் செபம் தற்பெருமையாகும், இதனை, தங்களிடமுள்ள சிறந்த ஆடைகளோடு அருள்சாதனக் கொண் டாட்டங்களில் கலந்துகொள்வோரிடமும் காணலாம் என்றார் திருத்தந்தை.

வீண்பெருமை, தன்னழகைக் காட்டும் பகட்டுடன் வாழ்வதற்கும் இட்டுச்செல்லக் கூடும், பகட்டு இருக்குமிடத்தில் எப்போதும் பிரிவினை இருக்கும் என்றுரைத்த திருத்தந்தை, ஒரு குழுமத் தைப் பிரிக்கும் மற்றொரு காரியம், வீணான பேச்சுக்களைப் பேசுவதாகும் என்றும், மற்றவர் பற்றி குறை பேசுவதன் தேவையை, சாத்தான் நம்மில் வைக்கின்றது என்றும் கூறினார்.

*மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

# மினவுதல் அன்னை பங்கில் சுய பாதுகாப்பு சாதனங்கள் தயாரிப்பு

**சிரம்பான்**: நெகிரி செம்பிலானில் உள்ள அரசு மருத்துவ முன்னணி பணியாளர்கள் இங்குள்ள புனித மினிவுதல் அன்னை பங்கின் பங்குத் தந்தையின் ஆதரவோடு மருத்துவம் சார்ந்த சுய பாதுகாப்பு சாதனங்கள் (Personal Protective Equipment) தைக்கும் திட்டத்தை மேற் கொண்டு வருகின்றனர்.

இந்தத் திட்டத்தை ஒருங்கிணைக்கப் பங்குத் தந்தை அருட்தந்தை சேவியர் என்ரூ அவர்கள் பங்கின் பெர்னாடெட் வோங் என்பவரை நியமித்துள்ளார். தையல் மற்றும் கத்தரிப்பதற்கானத் திறமை கொண்ட தன்னார்வலர்கள் இந்த பயன்மிக்கத் திட்டத்தில் உதவ அழைக்கப்பட்டதில், சுமார் 24 பேர் முன்வந்தனர்.

இப்பணியில் பங்குப்பெற்றோரில் பெரும்பாலோர் பங்கைச் சேர்ந்தவர்கள் என்றாலும், புத்த, சீக்கிய மற்றும் பிரிந்த சகோதரச் சபைகளைச் சேர்ந்த பிறரும் இதில் அடங்குவர்.



மொத்தம் 12 தையல் இயந்திரங்கள் இங்குக் கொண்டுவரப்பட்ட நிலையில், கடந்த ஏப்ரல் 14, செவ்வாயன்று, அருட்தந்தை சேவியர் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை (MCO) நடைமுறையில் இருந்தபோதிலும், மருத்து வர்கள், குறிப்பாக டாக்டர் பிரபாகரன் அருளானந்தம் மற்றும் டாக்டர் புனிதவதி முனுசாமி ஆகியோரின் முயற்சிக்கும், அவர்களின் நேரம், ஆற்றல் மற்றும் திறன்களை வழங்குவதில் அவர்களின் தாராள மனதுக்கும் அவர் நன்றி தெரிவித் தார்.

டாக்டர் புனிதவதி பின்னர் கைகளை கழுவுதல் மற்றும் சுத்தம் செய்வதற்கான ஏழு படிகள் குறித்துத் அந்தத் தன்னார்வப் பணியாளர்குளுக்கு விளக்கினார். வேலை யைத் தொடங்குவதற்கு முன் அவர்கள் தங்கள் வெப்பநிலையை தினமும் சரிபார்க்க வேண்டும் என்று அவர் விளக்கமளித்தார். அவர்கள் சமூக இடைவெளிக்கான தேவையைப் பின்பற்ற வேண்டும் (குறைந்தபட்சம் 1 மீட்டர் இடைவெளி) மற்றும் எப்போதும் முகக் கவசங்களை அணிய வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார். தொடக்க நிகழ்வுக்குப் பிறகு உடனடியாக வேலை தொடங்கியது.

வாரம் முழுவதும், அருட்தந்தை சேவியர் என்ரூ மற்றும் அருட்தந்தை தெரன்ஸ் தோமஸ் இருவரும் தங்கள் ஆதரவை வழங்கும் பொருட்டு மையத்திற்கு வருவதோடு தயாரிப்புப் பொருள்களை பெட்டிகளில் அடைக்கும் பணிகளில் உதவி வருகிறார்கள்.

தற்போது, இங்குள்ள தன்னார்வப் பணியாளர்களின் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளது. திங்கள்கிழமை முதல் வெள்ளி வரை மதியம் 12.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இரண்டு குழுக்களாக இவர்கள் தையல் பணியை மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

# திருஅவையின் இரு முக்கிய நிகழ்வுகள் தள்ளி வைப்பு

**வத்திக்கான்** : 2021-ஆம் ஆண்டு உரோமை நகரில் நடைபெறவிருந்த, குடும்பங்களின் உலக மாநாடும், 2022-ஆம் ஆண்டு லிஸ்பன் நகரில் நடைபெறவிருந்த, இளைஞர்கள் உலக தினமும் தள்ளி வைக்கப்பட்டுள்ளன

கொரோனா தொற்றுக்கிருமி பரவல் காரணமாக, வருகிற ஆண்டுகளில் நடைபெறவிருந்த திருஅவையின் இரு முக்கிய உலகளாவிய நிகழ்வுகள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன என்று, ஏப்ரல் 20, மாலையில் திருப்பீடம் அறிவித்தது.

2021-ஆம் ஆண்டு ஜூன் மாதம் உரோம் நகரில் நடைபெறவிருந்த, குடும்பங்களின் உலக மாநாடு, 2022-ஆம் ஆண்டு ஜூன் மாதமும், 2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், லிஸ்பன் நகரில் நடைபெறவிருந்த இளைஞர்கள் உலக நாள், 2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமும் நடைபெறும் என்று, திருப்பீட தகவல் தொடர்பக இயக்குனர் மத்தேயோ புரூனி அவர்கள் அறிவித்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பொதுநிலையினர், குடும்பம் மற்றும், வாழ்வு



பானமாவில் உலக இளைஞர் தினம், 2019

திருப்பீட அவையுடன் கலந்தாலோசித்தபின், குடும்பங்களின் உலக மாநாடும், இளைஞர்கள் உலக தினமும் நடைபெறும் நாள்களைத் தள்ளி வைப்பதற்குத் தீர்மானித்தார் என்றும், புரூனி அவர்கள் தெரிவித்தார்.

தற்போதைய கொரோனா தொற்றுக்கிருமியின் பரவல்நிலை, மற்றும், அதன் பின்விளைவுகள் காரணமாக, குடும்பங்களும், இளைஞர்களும், ஒன்றுகூடுவதில் ஏற்படும் சிரமங்களைக் கண்முன் நிறுத்தி, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்றும், புரூனி அவர்கள் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

### இளைஞர்கள் உலக நாள்

இளைஞர்கள் உலக நாளை, புனித திருத்தந்தை 2-ஆம் ஜான் பால் அவர்கள், 1985-ஆம் ஆண்டில் ஏற்படுத்தினார். அதன்பின்னர், இந்த நாள் ஒவ்வோர் ஆண்டும் மறைமாவட்ட அளவில் குருத்து ஞாயிறன்றும், ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, பன்னாட்டு அளவிலும் சிறப்பிக்கப்பட்டு வருகிறது. இந்நிகழ்வுகளில் இலட்சக் கணக்கான இளைஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

34-வது இளைஞர்கள் உலக நாள், 2019-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், மத்திய அமெரிக்க நாடான பானமாவில் நடைபெற்றது. அதில், ஏறத்தாழ ஏழு இலட்சம் கத்தோலிக்க இளைஞர்கள் பங்குபெற்றனர்.

2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் போர்த்துக்கல் நாட்டு லிஸ்பன் நகரில் நடைபெறும் இளைஞர்கள் உலக நாள், **"மரியா எழுந்து விரைந்து சென்றார்"** என்ற தலைப்பில், சிறப்பிக்கப்படும்.

### குடும்பங்கள் உலக மாநாடு

மேலும், குடும்பங்கள் உலக மாநாட்டை, புனித திருத்தந்தை 2-ஆம் ஜான் பால் அவர்கள், 1994-ஆம் ஆண்டில் தோற்றுவித்தார். இம்மாநாடு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, வெவ்வேறு நாடுகளில் நடைபெற்று வருகிறது.

"குடும்ப அன்பு: புனிதத்துவத்திற்கு ஓர் அழைப்பும், ஒரு வழியும்" என்ற தலைப்பில், குடும்பங்களின் உலக மாநாடு, 2022-ஆம் ஆண்டு உரோம் நகரில் நடைபெறவுள்ளது. இதற்கு முந்தைய இம்மாநாடு, 2018-ஆம் ஆண்டில், அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரில் நடைபெற்றது.

# கோவிட் 19-ன் பின்விளைவுகள் பற்றி சிந்திக்க வேண்டும்

**வத்திக்கான்:** கோவிட்19 நெருக்கடி நிலையில், திருத்தந்தையின் வேண்டுகோளின்படி, ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவை, கோவிட் 19 திட்டக்குழு ஒன்றை உருவாக்கியுள்ளது .

கொரோனா தொற்றுக்கிருமி பரவல் சூழலில், தலத்திருஅவைகள், மக்களின் வாழ்வைக் காப்பாற்றவும், கடும் வறுமையிலுள்ள மக்களுக்கு உதவுவதற்குமென, ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவை, கோவிட் 19 திட்டக்குழு ஒன்றை உருவாக்கியுள்ளது என்று அந்த அவையின் தலைவர் கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்கள் கூறினார்.

இது பற்றி வத்திக்கான் செய்தித் துறையிடம் பகிர்ந்துகொண்ட கர்தினால் டர்க்சன் அவர்கள், கோவிட்-19 நெருக்கடி நிலையில், திருஅவையின் அன்பையும், அக்கறையையும் முழு மனித குடும்பத்தின் மீது வெளிப்படுத்துவதற்கென, இத்தகைய ஒரு திட்டக்குழுவை உருவாக்குமாறு கடந்த மார்ச் மாதம் 20-ஆம் தேதி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டார் என்று கூறினார்.

குறிப்பாக, கோவிட் 19-ன் பின்விளைவுகளால், வருங்காலத்தில் மக்கள் எதிர்கொள்ளும், சமுதாய-பொருளாதார மற்றும், கலாச்சார சவால்கள் குறித்து ஆய்வு செய்வதற்கும், அவற்றை எதிர்கொள்ள வழிகாட்டுதல்களைப் பரிந்துரைப்பதற்குமென, திருப்பீட தலைமையகத்திலுள்ள மற்ற அவைகளின் ஒத்துழைப்புடன், ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவை, இந்த திட்டக்குழுவை உருவாக்குமாறு திருத்தந்தை கேட்டுக்கொண்டார் என்றும், கர்தினால் டர்க்சன் அவர்கள் தெரிவித்தார்.

திருத்தந்தையின் வேண்டுகோளின்படி, ஐந்து விதமான பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும் ஆற்றும் பணிகள் குறித்த விவரங்களை அவரிடம் சமர்ப்பித்துள்ளதாகவும், கர்தினால் டர்க்சன் அவர்கள் கூறினார்.

கொரோனா தொற்றுக்கிருமியின் பின்விளைவுகளை எதிர்கொள்வதில், உலகெங்கும் திருஅவை முன்னணியில் நிற்கின்றது என்றும், நலவாழ்வு, பொருளாதாரம் மற்றும் சமூகத்தைப் பொறுத்தவரை, குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் தேவைப்படுகின்றன என்பதையும், கர்தினால் டர்க்சன் அவர்கள் குறிப்பிட்டார்.

ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவை உருவாக்கியுள்ள திட்டக்குழுவில் முதல் பணிக்குழு, உலக ளாவிய காரித்தாஸ் அமைப்பு, வத்திக்கான் மருந்தகம், நற்செய்தி அறிவிப்பு பேராயம், திருப்பீட தர்மச் செயல்கள் அலுவலகம் போன்ற அமைப்புகள் மேற்கொள்ளும் பிறரன்புப் பணிகளை ஒருங்கிணைக்கும்



கர்தினால் டர்க்சன் (@VaticanMedia)

என்றும், சுற்றுச்சூழல், பொருளாதாரம், தொழில், நலவாழ்வு, அரசியல், சமூகத்தொடர்பு, பாதுகாப்பு போன்ற துறைகளில் இடம்பெறும் ஆய்வுகளை, இரண்டாவது குழு ஒருங்கிணைக்கும் என்றும் விவரித்தார், கர்தினால் டர்க்சன்.

மூன்றாவது பணிக்குழு, கோவிட் 19க்கு பின்னுள்ள உலகின் நிலைக்கு, உண்மையான மற்றும், நம்பகமான வழிகளில் உதவுவது குறித்து, தலத் திருஅவைகயோடு சேர்ந்து, தகவல் தொடர்புகளை ஊக்குவிக்கும் எனவும், நான்காவது குழு, திருப்பீட செயலகத்தின் வெளியுறவுத் துறை, நாடுகளோடு ஆற்றும் பணிகளுக்கு ஆதரவு வழங்கும் எனவும், ஐந்தாவது குழு, மற்ற கத்தோலிக்க பிறரன்பு அமைப்புகளுடன் இணைந்து, தலத் திருஅவைகளுக்கு நிதி உதவி கிடைப்பதை ஒருங்கிணைக்கும் எனவும் எடுத்துரைத்தார், கர்தினால் டர்க்சன்.

# பேரருளைத் தரும் எம்மாவு பயணம்

இயேசு கிறிஸ்து யூதர்களுக்கு அரசியல், சமூக ஏற்றத்தாழ்வு ஆகியவற்றிலிருந்து விடுதலை கொடுப்பார் என எதிர்பார்த்தச் சீடர்கள் (இருவர்), விரக்தியுடனும் ஏமாற்றத்துடனும் வேதனையுடனும் எருசலத்திலிருந்து ஊர் (எம்மாவு) திரும்புகின்றனர். மெசியா வருவார் விடுதலையும் மீட்பும் கொடுப்பார் என வேண்டிக் கொண்டிருந்த சீடர்களுக்கு இயேசுவின் இறப்பு பேரிடியாக இருந்தது.

அந்நிய (உரோமை) ஆட்சியாளர்க்கு எதிராக கிளர்ச்சிச் செய்து விடுதலைக் கொடுப்பார் என நம்பப்பட்ட இயேசுவைக் கொன்றது அந்நியர்கள் அல்ல, நீங்களே அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள் (திப.2:23) என எருசலத்தில் துணிச்சலாக யூதர்களைப் பார்த்து நியாயம் கேட்கிறார் திருத்தூதர்களின் தலைவர் பேதுரு. ஆனால் மரணத்தை அவர் வென்றுவிட்டார். அதற்கு நாங்களே சாட்சி (திப.2:32) என பேதுரு முழக்க மிடுகிறார், முதல் வாசகத்தில். எம்மாவு சம்பவத்தை நன்கு கவனித்துப் பார்த்தால், ஞாயிறுத்தோறும் நாம் கொண்டாடும் திருப்பலியின் பிம்பம் தெரியும். சோகம், ஏக்கம், வேதனை கலந்த மனத்தோடு எம்மாவு ஊர் திரும்பும் சீடர்களிடையே இயேசு வருகிறார். "இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்" (மத்.18:20) எனக்கூறிய இயேசு அவர்கள் நடுவே வருகிறார்.

திருப்பலியிலும் அப்பலியை நமது சார்பாக நிறைவேற்றும் அருள்பணியாளர் மத்தியிலும் மட்டுமல்லாது ஒன்றாகக் கூடியிருக்கும் மக்கள் மத்தியிலும் இயேசு இருக்கிறார். திருப்பலிக்கு மையமாக இருப்பது இருப்பகுதி. முதல் பகுதி வார்த்தை வழிபாடு. இரண்டாவது பகுதி நற்கருணை வழிபாடு. கவலைத் தோய்ந்த முகத்தோடு எம்மாவுக்கு நடந்து செல்லும் சீடர்களுக்கு இறைவாக்குரைக்கிறார். "அறிவிலிகளே! இறைவாக்கினர் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத் தினரே... மோசே முதல் இறைவாக் கினர் வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார்" (லூக். 24:25,27). அவர்களோடு தங்கி, பந்தியில் அமர்வது, இரண்டாவது பகுதி நற்கருணை வழிபாட்டைக் குறிக்கிறது. "..அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன" (லூக். 24:30,31).

நமது இக்கட்டான சூழ்நிலைகளில் கடவுள் வரவேண்டும் என விரும்புகிறோம். எம்மாவு செல்லும் சீடர்களுக்குக் காட்சியளித்த இயேசு நமக்கும் வரமாட்டாரா என ஏங்குகிறோம். தம்மோடு இருந்த சீடர்களை அவர் அறிவார், நொந்துபோகும் அவர்களைச் சென்று கண்டார். அவரை நாம் அறிவோமா? "நீங்கள் 'தந்தையே' என அழைத்து மன்றாடுபவர், ஆளைப் பார்த்தல்ல"(1பேதுரு1:17) என இரண் டாவது வாசகம் கூறுகிறது. பேதுருவைப் போல நம்பிக்கையில் வலிமைப் பெற வேண்டும் என கடவுள் விரும்புகிறார். உயிர்த்த ஆண்டவரிடமிருந்து ஆற்றலும் வல்லமையும் பெற்று, எருசலமில் கூடியிருந்து ஆயிரக்கணக்கான மக்களிடையே பேசினார். அறையில் பதுங்கியிருந்த பேதுரு துணிச்சலும் வல்லமையும் பெற்றுக் கிறிஸ்துவிற்குச் சாட்சியம் பகர்ந்தார். எம்மாவு பயணம் அவ்விரு சீடர்களுக்குப் புது நம்பிக்கையைக் கொடுத்தது. இவ்வுலகில் பயணிக்கும் நமக்கும் எம்மாவு அனுபவம் திடமான நம்பிக்கையைக் கொடுக்கும். பேரருளை வழங்கும் திருப்பலியில் முழு மனதோடும் முழு ஆன்மாவோடு பங்கு பெற்றோம் என்றால் உயிர்த்த ஆண்டவரைக் கண்டடைவோம்.

*-அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாங்கான்,*

**பாஸ்கா மூன்றாம் ஞாயிறு**

திப 2: 14, 22-33
திபா 16: 1-2,5. 7-8. 9-10. 11
1பேதுரு 1: 17-21
லூக்கா 24: 13-35

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : பாஸ்கா வாரம் 3**